**O.S.No.171/2015**

**Date:14.08.2018**

வாதி தரப்பு சாட்சி 1 - செல்லப்பன், த-பெ. மாலை அம்பலம்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் நான் 1ம் வாதி என்றால் சரிதான். 2 முதல் 6 வாதிகள் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். 7ம் வாதி கண்ணதாசன் என் உடன் பிறந்தவர் என்றால் சரிதான். அவரது அப்பா பெயர் என்ன என்றால் ஜெயராமன் ஆகும். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது ஏற்கனவே அசல் வழக்குஎண்.1-2012 என்ற வழக்கின் தீர்ப்பு விபரங்கள் தெரிந்துதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் அடிப்படையில் மதுரை சார்பு நீதிமன்றத்தில் எண்ணிடப்படாத மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அதில் ஒரு இடைநிலை மனு தாக்கல் செய்து, அதில் மலைச்சாமி, செல்வராஜ் என்ற பெரியசாமி, ராஜலெட்சுமி மற்றும் நாங்கள் அனைவரும் சேர்ந்து அந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்தோம் என்றால் கையெழுத்து வாங்கிச் சென்றார்கள், தாக்கல் செய்த விபரம் எனக்குத் தெரியாது. அந்த மேல்முறையீட்டு மனுவில் இடைநிலை மனு எண்.193-2012 ஆனது விசாரணைக்குப் பின்னர் 01.06.2012ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பேரில்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த உத்தரவு தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில், தாவாச் சொத்துக்கள் வாதிகளுக்குப் பாத்தியம் என்று விளம்புகைப் பரிகாரம் கோரப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிடைச் சொத்து, என் தாயார் மோளப்பிச்சி என்ற முத்தம்மாளுக்குப் பாத்தியம் என்று வாதிடுகிறேன் என்றால் சரிதான். அவரது தகப்பனார் பெரியசாமி, தாயார் கருப்பாயி என்றால் சரிதான். என் தாயார் 13.08.1999ல் இறந்தார் என்றால் சரிதான். என் தாயாருக்கும், தகப்பனாருக்கும, வாதிகளாகிய நாங்களும், காலம் சென்ற ஜெயராமன், பெண் மக்கள் லெட்சுமி, ரமுனா தேவி, பாக்கியவதி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். அந்த பெண் மக்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் வாரிசுகள்தான், ஆனால் சேர்க்கவில்லை, அவர்களுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது. நானும், மற்ற வாதிகளும், 1ம் பிரதிவாதியும் தெற்குத் தெருவில்தான் பூர்வீகமாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம்

பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அசல்வழக்கு எண்.1-2012ல் 13.10.1946ல் இறந்த மோளப்பிச்சியின் வாரிசுக்காகத்தான் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தாயார் ஏலம்மாள் என்றால் சரிதான். ஏலம்மாளின் கணவர் பெயர் பாட்டாண்டி என்ற தங்கச்சாமி என்றால் சரிதான். ஏலம்மாளின் உடன்பிறந்தவர்தான் கல்லம்பட்டியைச் சேர்ந்த சந்திரன் சேர்வை என்றால் தெரியாது. சாவித்திரியின் உடன்பிறந்தவர் காந்திமதி என்றால் சரிதான். காந்திமதி, ஏலம்மாள், சந்திரன் சேர்வை ஆகியோர் காலமாகிவிட்டனர் என்றால் சரிதான். மோளப்பிச்சி அம்மாளும் காலமாகிவிட்டார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சரிதான். அது தண்ணீர் பட்டு, அந்த வாசகங்களை படிக்கக்கூடிய அளவில் இல்லை என்றால் சரிதான். நான் இதற்கு ஆதரவாக சான்றிட்ட நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாலையம்பலத்தின் மனைவி என்ற இடத்தில் நான் சொல்லும் மோளப்பிச்சி என்ற முத்தம்மாள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 கிரயப் பத்திரமும் தண்ணீரால் நனையப்பட்டு, சரியான விபரங்கள் இல்லாமல் உள்ளது என்றால் ஓரளவு தெரிகிறது. இதில் இரண்டு இலக்கச் சொத்துக்கள்தான் உள்ளது என்றால் சரிதான். இதற்கு நான் சான்றிட்ட நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பட்டா பாஸ் புத்தகம் மோ.பி.முத்தம்மாள் என்ற பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பெறப்பட்ட தேதி விபரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் உள்ள சொத்துக்கள் அனைத்தும் தாவாச் சொத்துக்களில் இல்லை என்றால் 2, 3, 7 இலக்கச் சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்கள் தாவாச் சொத்துக்களாக உள்ளது. தாவாச் சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள பட்டா எண்.1317ன்படியான பட்டா எனக்கு எதன் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது என்றால் நீண்ட காலத்திற்கு முன்பாக பட்டா மாறியது, எதன் அடிப்படையில் என்று தெரியாது. வா.சா.ஆ.4 பற்றி வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 பாகப்பிரிவினைப் பத்திரத்திற்கான அசல் ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகைப்பட நகல் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்கள் 1ம் பிரதிவாதி சாவித்திரி என்பவரால் அசல் வழக்கு எண்.1-2012 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். இந்த இரண்டு ஆவணங்களில் நானோ, மற்ற வாதிகளோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணம் யாரிடமிருந்து வாங்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் மகன்கள் கொடுத்தார்கள். இந்த ஆவணம் அரசு வழக்கறிஞரால் சான்றிட்ட நகல் பெறப்பட்டு,

அதன் புகைப்பட நகல் என்றால் சரிதான். அந்த ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் மகன்கள் கொடுத்தார்கள். எனவே 1ம்பிரதிவாதி அசல் வழக்க எண்.1-2012 வழக்கல் இறந்து போன மோளப்பிச்சிக்கு வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார் எனறாலும், நான் சொல்லும் மோளப்பிச்சி என்ற முத்தம்மாளுக்கும், அந்த மோளப்பிச்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், அந்த வழக்கின் தீர்ப்புரையை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், சரியல்ல. எனக்கும், தாவாச் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே அசல் வழக்க எண்.1-2012ல் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி வாதியாக இருந்து கொடி வழி ஜாபிதா தாக்கல் செய்து, அதை நிருபித்து தீர்ப்புரை பெற்றுள்ளாா என்றாலும், நான் இந்த வழக்கில் கொடி வழி ஜாபிதா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தாவாச் சொத்துக்கள் என் அனுபவத்தில் இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், என்னிடம் அனுபவம் இருந்திருந்தால் நான் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்துக்களில் எனக்கு எந்தவிதான உரிமையும் அனுபவமும் கிடையாது என்றாலும், அசல் வழக்கு எண்.1-2012 தீர்ப்புரையை ரத்து செய்யக் கோருவதற்கு எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து, அதுவும் சார்பு நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(2, 3 பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)